[2002 ஏப்ரல் 2

பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் போட்டி வளருகிற காரணத்தினால் சன் டி.வி. பாணிதான் ஜெயா டி.வி. பாணியாகவும் இன்றைக்கு ஆகியிருக்கிறது. இதிலே ஒன்றும் வேற்றுமை இல்லை. உலகம் முழுவதும் இந்தப் போட்டிதான். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு திரு. செ. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வேலு அவர்களும், ஞானசேகரன் அவர்களும் சொன்னதைப்போல, சேலத்தில் இந்த மாத்திரைகளை உட்கொண்டதால் எந்த இறப்பும் ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று....*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே பேராசிரியர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். பிரச்சினை முடிந்தது. வேலு உட்காருங்கள். பேரவை விதி 110-ன் கீழ்....*

2. தகவல் கோரல் – *தொடர்ச்சி*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினை குறித்து....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய அறைக்கு வாருங்கள்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கை

பொது விநியோகத் திட்டத்திற்காகக் கொள்முதல் செய்யும் நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

2002 ஏப்ரல் 2]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அரிசிக்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் காவிரி வடிநிலப் பகுதிகளிலிருந்து சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் தமிழக அரசு, நெல் கொள்முதல் செய்து வருகிறது. அந்தந்த பருவத்தில் நிகழும் சூழ்நிலைக்கேற்ப ஏகபோகக் கொள்முதல், (Monopoly Procurement) அல்லது இணைக் கொள்முதல் (Parallel Procurement) முறை மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதே நேரத்தில், மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதார விலைக்கு, Minimum Support Price-க்கு அதிகமாக, விவசாயிகளின் நலன் கருதி, ஊக்கத் தொகையோ அல்லது இடை நிகழ்ச் செலவையோ தமிழக அரசு வழங்கி வருகிறது.*

2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசு 'ஏ' ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 560 ரூபாயும், சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 530 ரூபாயும், ஆதார விலையாக நிர்ணயித்திருந்தது. 2001 ஆம் ஆண்டு குறுவையிலும், 2002 ஆம் ஆண்டு சம்பா பருவத்திலும் இணைக் கொள்முதல் முறையைப் பின்பற்றி நெல் கொள்முதல் செய்யலாம் என்றும், மத்திய அரசின் ஆதார விலைக்கு மேல், குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் இடை நிகழ்ச் செலவிற்காக வழங்கவும் தமிழக அரசு முடிவு செய்தது.

2001 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில், இணைக் கொள்முதல் முறை மூலம், 337 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு 2,23,275 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு சம்பா பருவத்தில் 1-1-2002 முதல் காவிரி வடிகால் பகுதிகளில், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாகவும், இதர பகுதிகளில் வட்டக் கிடங்குகள் மூலமாகவும், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன்—அதாவது சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 530 ரூபாய்—'ஏ' ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 560 ரூபாய் என்பதற்கு மேலாக, குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாயை கூடுதலாக வழங்கி, விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்ய தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

மேலும், விவசாயிகளின் நலன் கருதி, முழு அளவிலான தரவெட்டுக்குப் பதிலாக இரண்டாம் தர நெல், குவிண்டால் ஒன்றுக்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 2

5 ரூபாயும், மூன்றாம் தர நெல் குவிண்டால் ஒன்றுக்கு 7 ரூபாய் 50 பைசாவும் பிடித்தம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. மேலும், காவிரி வடிநிலப் பகுதிகளில், இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், பருவம் தவறி பொழிந்த பெரும் மழையினால், சம்பா நெற்பயிர் பாதிக்கப்பட்டதை கருத்தில்கொண்டு, ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தபடி 18 சதவிகித ஈரப்பதமுள்ள நெல்லை மட்டும் கொள்முதல் செய்வதற்கு பதிலாக 22 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்யலாம் என்றும், அவ்விதம் அதிகமான ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வதால் ஏற்படுகின்ற இழப்பினை ஈடு செய்யும் வகையில் விவசாயிகளிடமிருந்து எவ்வித பணப் பிடித்தமும் செய்ய வேண்டியதில்லை என்றும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தமிழக அரசு ஆணையிட்டது. அதாவது, அந்த இழப்பை தமிழக அரசே ஏற்றுக்கொள்ள முன் வந்தது. ஆனால், நடப்பு சம்பா பருவம் முடிவுற்ற இந்த வேளையில், வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்கள், வேறு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் இதர பகுதிகளில் இருந்து நெல்லை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து, காவிரி வடிநிலப் பகுதிகளில் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விற்று லாபம் அடைய முயற்சிப்பது தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்வதை தமிழக அரசு 15-3-2002 அன்று முதல் நிறுத்திக்கொள்ளவும், இன்னும் அறுவடை நடந்துகொண்டிருக்கின்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி, அவர்கள் விரும்பினால், வட்டக் கிடங்குகளில், 15-4-2002 வரை நெல்லை விற்கலாம் எனவும், தமிழக அரசு ஆணையிட்டது.

முற்பகல் 11-50

இதற்கிடையே, சில புள்ளிவிவரங்களை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நடப்பு சம்பா பருவத்தில் 9,79,590 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் தற்பொழுது கையிருப்பில் உள்ள அரிசி மத்திய அரசு மாதந்தோறும் வழங்கும் அரிசியுடன் சேர்த்து, பொது விநியோகத் திட்டத்திற்கும், தமிழக அரசு அமல்படுத்தும் இதர நலத் திட்டங்களுக்கும், 9 மாதத்திற்குப் போதுமானதாகும். வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான மத்திய அரசின் ஒதுக்கீட்டின்படி கிடைக்கும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு

2002 ஏப்ரல் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

8 ரூபாய் 30 பைசா என்று இருந்தபோதிலும், விவசாயிகளின் நலன் கருதி, தமிழக அரசு நெல் கொள்முதல் செய்வதன் மூலம் கிடைக்கும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு 12 ரூபாய் என்ற அளவில், அதாவது கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 70 பைசா அதிகமாக இருந்தபோதிலும் தேவைக்கு அதிகமாக அரிசி கையிருப்பில் உள்ள காரணத்தினால், மத்திய அரசின் ஒதுக்கீட்டினை தமிழக அரசு பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதனாலும் தமிழக அரசுக்கு பெருத்த இழப்பு ஏற்படுகிறது.

தற்போது காவிரி வடிநிலப் பகுதிகளில் ஒருசில இடங்களில் காலம் தாழ்ந்து சம்பா அறுவடை நடைபெற்றுள்ளதால், அந்தப் பகுதி விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை, 15-3-2002 தேதிக்குள் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியவில்லை எனவும், அரசு தற்போது அறிவித்துள்ளபடி வட்டக் கிடங்குகளுக்கு எடுத்துக்கொண்டு செல்வதற்குக் கூடுதலாக போக்குவரத்துச் செலவு செய்ய நேரிடுகிறது எனவும், தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி செயல்படுகின்ற இந்த அரசு, அவர்களது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, போக்குவரத்துச் செலவுக்கு அதிகபட்சமாக, குவிண்டால் ஒன்றுக்கு 12 ரூபாய் 50 பைசா வரை ஆகலாம் என்பதைக் கணக்கிட்டு, அதை ஈடு செய்யும் வகையில், ஆதார விலைக்குக் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் அளிக்க, இந்த அரசு தீர்மானித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஏற்கெனவே, காவிரி வடிநிலப் பகுதிகளில் நெல் கொள்முதல் செய்து வரும் 39 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வட்டக் கிடங்குகளுடன் மேலும் 28 சேமிப்புக் கிடங்குகளிலும் Buffer Godown-களிலும், நெல் கொள்முதல் செய்ய தமிழக அரசு ஆணையிட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக விவசாயிகளின் நலன் காப்பதில், யாருக்கும் இந்த அரசு சளைத்தது இல்லை. ஏற்கெனவே இந்த அரசு விவசாயிகளின் கடன்களுக்கான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்துள்ளது. இப்போது காவிரி வடிநிலப் பகுதி விவசாயிகளின் குறை தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

[2002 ஏப்ரல் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம். (குறுக்கீடு) 110-வது விதியில் பேசக்கூடாது. பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. அரசன் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *நாங்கள் இதுசம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. 110 அறிக்கைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *ஏற்கெனவே, இது சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தும், எங்களை இதுசம்பந்தமாக பேச அழைக்காமல் விதி 110-ன்கீழ் முதலமைச்சர் அவர்கள் ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய* right-*ஐ நான்* question *பண்ணவில்லை. ஆனால், எங்களுடைய* right-*ல் இப்படி* invade *செய்வது சரிதானா என்று நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

5. கவன ஈர்ப்பு

அறந்தாங்கி தொகுதி, மனையல்குடி ஒன்றியம், கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ப. அரசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. அரசன்.*

***திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலே 40 கிலோ மீட்டர் தொலைவிற்கு கடற்கரை, நீண்ட கடற்கரை...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அரசன், அந்தத் தீர்மானத்தை அப்படியே வாசியுங்கள், அவ்வளவுதான். அதை வாசியுங்கள். பேசக்கூடாது; வாசியுங்கள்.*